## பொது நலனுக்காக சேவைபுரிதல்




# ஒன்டாரியோ ஆசிரியர்கள் கல்லூரி: சிறந்த கல்வி கற்பித்தலுக்கான தரத்தை நிறுவுகிறது



நாம் நமது ஆசிரியர்களுக்கு அவர்கள் சிறப்பாக செயல்பட தயார்ப்படுத்தும்போது, மாணவர்கள் சாதிக்கக்கூடியவற்றுக்கு எல்லையே இல்லை. ஆசிரியர்கள் கல்வித் திட்டங்களுக்கு உரிமம் அளித்தல், மிக உயர்ந்த தொழில்ரீதியான மற்றும் நன்னெறிரீதியான தரநிலைகளை நிறுவுதல் மற்றும் ஆமோதம் வழங்குதல் ஆகிய செயல்பாடுகள் மூலம் ஒன்டாரியோவில் கல்வி கற்பித்தலை ஒன்டாரியோ ஆசிரியர்கள் கல்லூரி ஒழுங்குமுறைப்படுத்துகிறது.

பின்வருபவற்றை செய்வதன் மூலம், கல்லூரி, பொது நலனுக்கு சேவை செய்து பாதுகாக்கிறது:

- ஒன்டாரியோவில் அரசு நிதி பெறும் பள்ளிகளில் மற்றும் பள்ளி அமைப்புகளில் பணிபுரிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ் அளிப்பது
- ஆசிரியர்களை கல்வி கற்ப்பித்தலுக்கு தயார் செய்யும் திட்டங்களையும் பாடத்திட்டங்களையும் ஆமோதிப்பது
- ஒன்டாரியோ ஆசிரியர்களுக்கான மிக உயர்ந்த தரத்தை நிலைநாட்டத் தவறுபவர்களை கட்டுப்பாடு செய்வது.

ஆசிரியர் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றுக்கு அனுமதி அளிப்பதன் மூலம் கல்லூரியை 37-அங்கத்தினர்கள் கொண்ட ஒரு மன்றம் (தேர்ந்தெடுக்கப்படுகிற 23 நபர்கள் மற்றும் துறையால் நியமிக்கப்படுகிற 14 நபர்கள்) நிர்வாகம் செய்கிறது.

## பொது நலனுக்காக நிர்வாகம் செய்தல்

ஆசிரியர் தொழிற்பயிற்சியின் அடித்தளத்தில், தொழில் வல்லுநர்களாக ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படும் நடத்தையை வழிகாட்டும் தரநிலைகளுக்கு ஆசிரியர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

ஆசிரியர் தொழிலுக்கான நன்னெறிரீதியான தரநிலைகள்; கவனிப்பு, கௌரவம், நம்பிக்கை மற்றும் நேர்மை ஆகிய குணங்கள் ஆசிரியர் தொழிலுக்கு மூலாதாரமானவை என்ற கோட்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

ஆசிரியர் தொழிலுக்கான பயிற்சித் தரநிலைகள் ஒன்டாரியோவில் ஆசிரியர் தொழிலுக்குத் தேவையான அறிவு, திறன்கள், மற்றும் பண்புகளை விவரிக்கிறது. இதில் மாணவர்களுக்கான ஈடுபாடும், மாணவர்கள் கற்றல், கற்கும் சமூகங்களில் தலைமைப்பண்பு, தொடரும் தொழில்ரீதியான கற்றல் மற்றும் தொழில்ரீதியான அறிவாற்றல் மற்றும் பயிற்சி ஆகியவையும் உள்ளடங்கும்.

"கற்பித்தல் சமூகத்தின் மிக உன்னதமான தொழிலாகும். கற்பித்தலில் தொழில்முறை நமது மிகப்பெரிய முன்னுரிமை ஆகும். ஆசிரியர்களுக்கு சிறந்தது எதுவோ, அது எல்லா ஒன்டாரியோ வாசிகளுக்கும் சிறப்பானது ஆகும்."

மைக்கேல் சால்வடோரி,
தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் பதிவாளர்,
ஒன்டாரியோ ஆசிரியர்கள் கல்லூரி


கூடுதல் தகவல்களுக்கு, பின்வரும் முகவரிக்கு எழுதவும் அல்லது வருகை புரியவும்:
ஒன்டாரியா ஆசிரியர்கள் கல்லூரி
101 ப்லூர் ஸ்ட்ரீட் வெஸ்ட்
டொரொன்டொ ON M5S 0A1

தொலைபேசி: 416-961-8800
ஒன்டாரியோவில் கட்டணமில்லாத
தொலைபேசி: 1-888-534-2222
தொலைநகல்: 416-961-8822
மின்னஞ்சல்: info@oct.ca
www.oct.ca


Ontario College of Teachers | Setting the Standard for Great Teaching

# உங்களுக்கு கடமைப்பட்டது

**திறந்த மற்றும் வெளிப்படையான முறையில் செயல்படுவது பொதுமக்கள் நம்பிக்கையை வளர்க்க உதவுகிறது.**

## விரைவுப் பார்வை

- 1997 இல் தொடங்கப்பட்டது
- 239,000 உறுப்பினர்கள்
- 2014 இல் சுமாராக 9,800 புதிய ஆசிரியர்கள் சான்றளிக்கப்பட்டனர்
- சுய-கட்டுப்பாடு, தொழிலின் முதிர்ச்சியையும் ஆசிரியர்களின் விசேட திறமைகளையும் அறிவையும் அனுபவத்தையும் கருத்தில் கொள்கிறது.

## உரிமமளித்தல்

ஒன்டாரியோ ஆசிரியர் கல்லூரியால் சான்றளிக்கப்பட்ட தகுதிபெற்ற ஆசிரியர்கள் மட்டுமே தமது பெயருக்குப் பிறகு OCT - ஒன்டாரியோ சான்றளிக்கப்பட்ட ஆசிரியர் - என்ற தொழில்ரீதியான பட்டத்தை பயன்படுத்த முடியும். ஆசிரியர்களுக்கு சான்றளிப்பதற்கான தேவைப்பாடுகளை நிலைநாட்டுவதற்கான கல்லூரியின் திறனானது, மாணவர்கள் கற்கவும் சாதிக்கவும் தேவையான அறிவு மற்றும் திறமைகளைக் கொண்ட மிக உயர்ந்த தகுதிபெற்றவர்களால் குழந்தைகளும் இளைஞர்களும் கற்பிக்கப்படுவதை உறுதிசெய்கிறது.



## அங்கீகாரமளித்தல்

ஒன்டாரியோவில் பல்கலைகழக கல்வித் துறைகளில் முழு-நேர மற்றும் பகுதி-நேர ஆசிரியர் கல்வித் திட்டங்களுக்கு கல்லூரி அங்கீகாரம் அளிக்கிறது. ஆசிரியர்கள் தமது பணிக்காலம் முழுவதும் நிகழ்கால நடப்பிலும் பொருத்தமாகவும் இருக்க உதவும் நூற்றுக்கணக்கான கூடுதல் தகுதிப் பயிற்சிகளையும் கல்லூரி மீள்பார்வையிட்டு ஆமோதிக்கிறது.

## ஒழுங்குமுறை

தகுதியற்ற, கல்வி கற்பிக்கத் தயார்நிலையில் இல்லாத அல்லது ஒன்டாரியோவில் எதிர்பார்க்கப்படும் தொழில்ரீதியான நடத்தையை மீறும் கல்லூரி உறுப்பினர்கள் மீதான புகார்களை விசாரணை செய்து தீர்க்கும் கடமை கல்லூரிக்கு உள்ளது.

வகுப்பறைகள் பாதுகாப்பானவை எனவும் தொழில்ரீதியான ஒழுக்கக்கேடு செய்ததாக கண்டறியப்படும் உறுப்பினர்களை ஆசிரியர் தொழில் தீவிரமாக கையாள்கிறது எனவும் பெற்றோர்கள் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். அதேபோல், தொழில்ரீதியான ஒழுக்கக்கேடு செய்ததாக குற்றம் சுமத்தப்படும் உறுப்பினர்களுக்கு நியாயமான வழிமுறைக்கு உரிமை உள்ளது.

விகிதப்படி பார்க்கும்போது, ஆசிரியர்களுக்கு எதிரான புகார்கள் அரிதானவை. எந்தவொரு வருடத்திலும் கல்லூரியின் 239,000 உறுப்பினர்களில் சுமாராக 100 நபர்கள் மட்டுமே பொது விசாரணையை எதிர்கொள்கிறார்கள். தொழில்ரீதியான ஒழுக்கக்கேட்டுக்கான தண்டனைகளானது, எச்சரிக்கை, அறிவுரை பெறுமாறு அல்லது பயிற்சிகள் எடுத்துக்கொள்ளுமாறான கட்டளை முதல் ஆசிரியர் தொழில் செய்யும் உரிமத்தை இழப்பது வரை இருக்கும்.

- *தொழில்முறை நடத்தையில் பங்குதாரர்கள்.* பொது நலனுக்கு சேவை செய்யவும் பாதுகாக்கவும் ஒரு உறுதிமொழியை அல்லது சான்றை கல்லூரி மன்றத்தின் உறுப்பினர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். துறையால் நியமிக்கப்பட்ட மூன்று நபர்களைக் கொண்ட ஒரு பொது நலக் குழுவும் கூட பொது நலனுக்குத் தொடர்புடைய விஷயங்களில் கல்லூரி மன்றத்துக்கு அறிவுரை வழங்கும்.
- *ஓர் ஆசிரியரைக் கண்டறியவும்.* எல்லா சான்றளிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொதுப் பதிவேட்டை கல்லூரி பராமரிக்கிறது. oct.ca என்ற எங்கள் வலைத்தளத்தில் ஓர் ஆசிரியரைக் கண்டறியவும் என்ற பகுதிக்குச் சென்று ஒவ்வொரு உறுப்பினரின் நிலையையும், கல்வி கற்பிக்க அவர்கள் தகுதியையும், அவர்கள் எப்போது சான்றளிக்கப்பட்டார்கள் எனவும் அவர்களது சான்றிதழில் ஏதாவது நிபந்தனைகள் அல்லது ஒழுங்குமுறை குறிப்புகள் உள்ளனவா எனவும் பார்க்கலாம்.
- *கிடைக்கப்பெறும் முடிவுகள்.* தொழில்ரீதியான ஒழுக்கக்கேட்டுப் புகார்களை எதிர்கொள்ளும் உறுப்பினர்களுக்கு கல்லூரி பொது விசாரணையை நடத்துகிறது. விசாரணை அறிவிப்புகள் மற்றும் விசாரணைகளின் முழு முடிவுகள் oct.ca இல் கிடைக்கும்.
- *குறிப்பிட்ட வழிகாட்டுதல்.* தொழிலின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டு வாரியம் என்ற முறையில், உறுப்பினர்களுக்கு தொழில்ரீதியான அறிவுரை வழங்கும் அதிகாரம் கல்லூரிக்கு உள்ளது. சமூக மற்றும் மின்னணு ஊடகங்களின் பயன்பாடு முதல் ஒரு குழந்தை தவறாக நடத்தப்படுவதாகவோ, கவனிக்கப்படாமல் இருப்பதாகவோ ஆசிரியர்கள் சந்தேகித்தால் அவர்களுக்கு அதை தெரியப்படுத்தவேண்டிய கடமை வரை இதில் உள்ளடங்கும்.
- *திறந்த அழைப்புகள்.* கல்லூரியின் காலாண்டு மன்றக் கூட்டங்கள், வருடாந்தர கூட்டம், மற்றும் பெரும்பாலான ஒழுங்குமுறைக் குழு விசாரணைகளில் நீங்கள் கலந்து கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள். எங்கள் வலைதளத்தில் நிகழ்ச்சியேட்டை (மினிட்ஸ்) பார்ப்பதன் மூலம் மன்ற கூட்டங்களின் நடவடிக்கைகளை கவனிக்கவும்.
- *எப்போதும் கலந்தாலோசித்தல்.* முன்மொழியப்படும் கொள்கை அல்லது ஒழுங்குமுறை மாற்றங்கள் குறித்து கல்வித்துறைக்குள் விரிவாக ஆலோசனை நடத்த கல்லூரி பெருமுயற்சியை மேற்கொள்கிறது மற்றும் அதில் பெருமை கொள்கிறது. எங்களது தி ஸ்டாண்டர்ட் என்ற பொது மின்-பத்திரிக்கைக்கு சப்ஸ்க்ரைப் செய்யுங்கள் மற்றும் கலந்துகொள்வதற்கான வாய்ப்புகளை கவனியுங்கள்.
- *மேலும் அறிந்துகொள்ளவும்.* எங்களது வருடாந்தர அறிக்கைகள், ஆய்வுகள், உறுப்பினர்களுக்கு அறிவுரைகள் மற்றும் மேலும் பலவற்றைப் பார்க்க oct.ca க்கு வருகை புரியவும்.

